ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீகமலவல்லி நாயகி ஸமேத ஸ்ரீஅழகியமணவாள பரப்ரஹ்மணே நம:



(உறையூர் "நம்நாச்சியார்" கமலவல்லி)

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# ஸ்ரீலக்ஷ்மீ தந்த்ரம்

(ஐந்தாவது அத்யாயம் – மூன்றாம் பகுதி)
இதற்கான ச்லோகம் மற்றும் பொருள் – தமிழில்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

5-41 ரஸமாத்ராந்மயா க்ஷிப்தாத் தஸ்மாஜ்ஜ்ஞே ரஸஸ்தத:
கந்த தன்மாத்ரம் அபி ஆஸீத் தஸ்மாத் ச ப்ரேரிதாந் மயா

பொருள் - இந்த ரஸ தன்மாத்திரையில் இருந்து, எனது தூண்டுதலின் காரணமாக, ரஸம் என்னும் நீர் வெளிப்பட்டது. அதில் இருந்து கந்த தன்மாத்திரை என்னும் வாசனைக்கான அடிப்படை வெளிப்பட்டது.

5-42 சுத்தோ கந்த: ஸமுத் பூத இதீயம் பௌதிகீ பிதா
மாத்ராணி ஸூக்ஷ்ம பூதாநி ஸ்தூல பூதாநி ச அபரே

பொருள் – கந்த தன்மாத்திரையானது என்னால் தூண்டப்பட்டு தூய்மையான மணம் வெளிப்படும்படிச் செய்யப்பட்டது. இப்படியாகவே தன்மாத்திரைகள் உண்டாயின. இந்தத் தன்மாத்திரைகள் என்பது ஸூக்ஷ்மமானவை ஆகும். இவற்றைத் தவிர மற்றவை அனைத்தும் ஸ்தூலமானவை ஆகும்

குறிப்பு - தன்மாத்திரைகள் சப்தம், தொடுதல், ரூபம், ரஸம், கந்தம் எனப்படும். இவை அனைத்தும் ஸூஷ்மமாக (அந்தந்த புலன்களால் உணர இயலாதவை; உதாரணமாகச் சப்தம் என்னும் தன்மாத்திரையை நாம் காதால் கேட்க இயலாது, ஆயினும் அது உள்ளது) உள்ளன. இவை ஸ்தூலமாக நமக்குத் தோன்றுகின்ற ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் பூமி ஆகியவற்றின் ஆதாரமாக உள்ளன.

5-43 சப்தாதய: ஸமாக்யாதா குணா: சப்தாதயஸ்து யே
ஸ்தூல பூதா விஸர்க்காஸ்தே நான்யே சப்தாதயோ குணா:

பொருள் - சப்தம் முதலானவற்றின் தன்மைகள் அனைத்தும் அந்தந்த தன்மாத்திரைகளின் (அல்லது அந்தந்த ஸூக்ஷ்மங்களின்) வெளிப்பாடாக உள்ளன. அவை அந்த தன்மாத்திரைகள் இன்றி தனித்து இருக்க இயலாது.

5-44 சாந்தத்வம் ச ஏவ சோதரத்வம் மூடத்வம் ச இதி தத் த்ரிதா
ஸத்த்வாத் உந்மேஷ ரூபாணி தாந ஸூக்ஷ்மேஷு ஸந்தி ந

பொருள் – ஸத்வம் முதலான குணங்களின் வெளிப்பாடாக உள்ள - சாந்தமாக இருந்தல், அசைதல், அறிவற்று இருத்தல் முதலான தன்மைகள் ஸூக்ஷ்ம நிலையில் காணப்பட மாட்டாது.

5-45 தேந தந்மாத்ரதா தேஷாம் ஸூக்ஷ்மாணாம் பரிகீர்த்திதா
ஸுக துக்காதிதாயித்வாத் ஸ்தூலத்வம் இதரத்ர து

பொருள் – (கடந்த ச்லோகத்தில் உள்ள கருத்து) – அதன் காரணமாகவே ஸூக்ஷ்மமாக உள்ள அனைத்தும் தன்மாத்திரைகளின் தன்மைகளை அப்படியே கொண்டுள்ளன என்று

கூறப்படுகின்ரன. மற்ற அனைத்தும் சுகதுக்கங்களை அளித்தபடி உள்ளதால் (அல்லது சுகதுக்கங்களை வெளிப்படுத்தியபடி உள்ளதால்), அவை ஸ்தூலத்தின் தன்மை கொண்டுள்ளன என்றாகிறது.

5-46 ஸ்தூலாநாமேவ பூதாநாம் த்ரிதாவஸ்தா ப்ரகீர்த்திதா
ஸூக்ஷ்மாச்ச பித்ருஜாச்ச ஏவ ப்ரபுத இதி பேதத:

பொருள் - ஸ்தூலமான வஸ்துக்கள் அனைத்தும் மூன்று விதமான நிலைகளில் காணப்படும். அவையாவன ஸூக்ஷ்மம், பித்ருஜம், ப்ரபூதம் - என்பன ஆகும்.

5-47 கடாத்யா விவிதா ப்ரஹ்மா: ப்ரபூதா இதி சப்த்யதே
சுக்ல சோணீத ஸம்பூதா விசேஷா: பித்ருஜா: ஸ்ம்ருதா

பொருள் - இந்த உலகில் காணப்படும் கடம் போன்ற பல்வேறு பொருள்கள் ப்ரபூதா என்று கூறப்படுகின்றன. இரத்தத்துடன் விந்து கலப்பதால் உண்டாகும் உயிர்கள் அனைத்தும் பித்ருஜம் எனப்படுகின்றன.

5-48 ஸூக்ஷ்மாஸ்து பஞ்சபூதா: ஸ்யு: ஸூக்ஷ்ம தேஹவ்யபாச்ரய:
ஸர்க்கோ பூதாதிஜோ ஹி ஏவம் க்ரமச: பரிகீர்த்தித:

பொருள் - ஸூக்ஷ்ம நிலையானது பஞ்சபூதங்களான ஆகாயம், காற்று, நீர், நெருப்பு மற்றும் பூமி ஆகியவற்றுடன் கூடியது. இதன் மூலம் ஸூக்ஷ்ம நிலையில் உள்ள தேஹம் உண்டாகிறது. இப்படியாக பூதாதி என்பதில் இருந்து அனைத்தும் தோன்றும் விதமானது நிறைவு செய்யப்பட்டது.

5-49 அஹங்காரஸ்ய யாவம்சௌ ரஜ: ஸத்வமயம் ஆச்ரயௌ
வைகாரிக இதி ப்ரோக்த: ஸாத்த்விகோ அஸ்தயோ: பர:

பொருள்- ஸத்வம் மற்றும் ரஜஸ் ஆகியவற்றை உள்ளடக்கிய அஹங்காரம் என்பதில் ஸத்வம் மட்டுமே உள்ள பகுதியானது வைகாரிகம் எனப்படுகிறது.

5-50 தைஜஸ: கதித: ஸத்பிஸ்தயோ: ஸ்ருஷ்டிமிமாம் ச்ருணு
வைகாரிகாத் அஹங்காராத் ஆஸீத் ச்ரோத்ராதித் இந்த்ரியம்

பொருள் - அஹங்காரம் என்பதில் ரஜஸ் மட்டுமே உள்ள பகுதியானது தைஜஸம் என்று அறிஞர்களால் கூறப்படுகிறது. இவற்றிலிருந்து மற்றவை எவ்விதம் தோன்றின என்று கூறுகிறேன், கேட்பாயாக. செவிகள் (கேட்கும் உறுப்புக்கள்) முதலான ஞான இந்த்ரியங்கள் அனைத்தும் வைகாரிக அஹங்காரத்திலிருந்து வெளிப்படுகின்றன.